## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்

# இரண்டாந்தவணைப் பரீட்சை-2023

## தரம் - 11

| | | | | |
|---|---|---|---|---|
| விவசாயமும் உணவு தொழிநுட்பவியலும் I,II | 81 | T | I,II | மூன்று மணித்தியாலம் |

**பகுதி-I**

1. எந்த மன்னன் காலத்தில் இலங்கை கீழைத்தேசங்களின் தானியக் களஞ்சியம் என அழைக்கப்பட்டது?

   I வசபன்  II மகாசேனன்  III பராக்கிரமபாகு  IV தாதுசேனன்

2. பசுமைப்புரட்சிக்காலத்தில் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட சில விவசாய அபிவிருத்தி வழிமுறைகள் தற்காலத்தில் மனித சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. அவ்வாறான ஒரு வழிமுறையாக அமைவது.

   I அதிக விளைச்சல் கொண்ட பயிர் பேதங்கள் அறிமுகம் செய்யப்பட்டமை.

   II நவீன விவசாய இயந்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டமை.

   III வருடத்தின் இரண்டு போகங்களிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டமை.

   IV பூச்சிநாசினிகள் அறிமுகம் செய்யப்பட்டமை.

3. குறைந்தளவு ஒளிச் செறிவு நிலவும்போது.

   I கத்தரி,மிளகாய்,தக்காளி போன்ற பயிர்கள் அதிகம் காய்க்கும்

   II பெகோனியா,பன்னத்தாவரங்கள் போன்ற அலங்கார தாவரங்கள் சிறப்பாக வளரும்.

   III தானியப் பயிர்களில் ஒளித்தொகுப்பு வீதம் அதிகரிக்கும்

   IV கிழங்குப் பயிர்களில் கிழங்குகளின் வளர்ச்சி அதிகரிக்கும்

4. இலங்கையின் விவசாய காலநிலை வலயங்கள் பல்வேறு குறியீடுகளின்மூலம் காட்டப்படும் WU,IM எனும் குறியீடுகள் மூலம் காட்டப்படுவன முறையே.

   I தாழ்நாட்டு ஈரவலயம், தாழ் நாட்டு இடைவலயம்

   II மேல்நாட்டு இடைவலயம், மததியநாட்டு உலர்வலயம்

   III மேல்நாட்டு உலர்வலயம், தாழ்நாட்டு ஈரவலயம்

   IV மேல்நாட்டு ஈரவலயம், மத்தியநாட்டு இடைவலயம்

5. பின்வரும் காரணிகளை கருதுக.

   A குத்துயரம்  B பிரதேசத்திலுள்ள மண்வகை

   C மத்திய கோட்டிலிருந்தான தூரம்  D பிரதேசத்திலுள்ள தாவர வர்க்கம்

   இவற்றள் குறித்த பிரதேசமொன்றின் வளிமண்டல வெப்பநிலையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாவன.

   I A,B,C  2. A,C,D  3. B,C,D  4. A,B,C,D

6. இடை வலயத்திற்கு கிடைக்கும் வருடாந்த மழைவீழ்ச்சி வீச்சு யாது?

   I 500mm-1000mm  II 1500mm-2500mm  III 1750mm-2500mm  IV 2500mm-3500mm

7. மணல் மண்ணை பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமானதாக்குவதற்கு அம் மண்ணுடன் சேர்க்கவேண்டிய மிகபவ் பொருத்தமான பொருள்.

I அடையல் மண் II களி மண் III மரச்சாம்பல் IV சேதனப்பொருள்

8. தீப்பாறையான கிரனைட்டு உருமாற்றமடைவதால் உருவாவது.

I குவாட்ஸ் II சலவைக்கல் III நைஸ் IV பெக்மரைற்று

9. அதிக போசணை தன்மை நிறைந்த வலயம் எது?

I O II A III B IV C

10. குக்கற் பீற்றேசிய குடும்பத்தைச்சேர்ந்த தாவரங்களாவன

I கௌப்பி,பயறு,போஞ்சி II சோளம்,குரக்கன்,நெல்

III பூசணி,புடோல்,பாகல் IV கத்தரி,தக்காளி,மிளகாய்

11. துணைப்பண்படுத்தலின் நோக்கங்களாவன.

I மண்ணைப் புரட்டலும் தூர்வையாக்கலும்

II மண்ணை தூர்வையாக்கலும் மட்டப்படுத்தலும்

III களை கட்டுப்பாடும் தூர்வையாக்கலும்

IV மண்ணை புரட்டலும் களை கட்டுப்பாடும்

12. வரம்புசால் பாத்திகளில் நாட்டுவதற்கு சிபாரிசு செய்யப்படும் பயிரை தெரிவு செய்க.

I கரட் II மிளகாய் III வெண்டி IV நிலக்கடலை

13. பின்வரும் நீர்பாசன முறைகளில் மிக அதிகளவு நீர் தேவைப்படும் முறையாக அமைவது.

I சால் நீர்ப்பாசனம் II பாத்தி நீர்ப்பாசனம் III பரவல் நீர்ப்பாசனம் IV தூவல் நீர்ப்பாசனம்

14. மரக்கறி வித்துக்களை நாற்றிடுவதற்கு பயன்படுத்தப்படும் நெரிடோக்கா நாற்றுமேடையின் சராசரி அளவு யாது.

I 1cm, 1cm, 1cm II 5cm, 5cm, 5cm III 3cm,3cm,3cm IV 8cm,8cm,8cm

15. நாற்றுமேடை ஊடகக்கலவையில் 1:1 எனும் விகிதத்தில் அடங்கியிருக்க வேண்டிய கூறுகள்

I மேல்மண்,கூட்டெரு II உமி,தும்புத்தூள் III தும்புத்தூள்,மேல்மண் IV உடன்சாணகம்,மேல்மண்

16. பயிர்ச்செய்கையின்போது பசுந்தாட் பசளையாக பயன்படுத்த மிகவும் உகந்த தாவரமாக அமைவது

I சல்வீனியா II கிளிசறியா III கினிப்புல் IV ஜப்பானிய ஜங்கோனியா

17. இலங்கையில் காணப்படுகின்ற ஆக்கிரமிப்புக் களையாக அமைவது

I குப்பைமேனி II ஆணையறுகு III சல்வீனியா IV பாத்தீனியம்

18. பயிர்களுக்கு ஏற்படும் கீழ் பூஞ்சணநோய் துருநோய் ஆகியவற்றிற்கான நோய்க்காரணி எது

I பற்றீரியா II வைரஸ் III பங்கசு IV பைற்றோ பிளாஸ்மா

19. தாவரப் போசணைக்கு இன்றியமையாத நுண்போசணை மூலகங்களை மட்டும் கொண்ட தெரிவு எது

I நாகம்,செம்பு,நைதரசன்,கல்சியம் II செம்பு,போரன்,நைதரசன்,பொசுபரசு

III மக்னீசியம்,பொட்டாசியம்,கல்சியம் IV நாகம்,செம்பு,போரன்,மங்கனீசு

20. சான்றுப்படுத்தப்பட்ட விதை நெல்லில் காணப்படவேண்டிய ஆகக்குறைந்த முளைதிறன் சதவீதம்

I 85% II 90% III 95% IV 99%

21. இலங்கையில் இனவிருத்தி செய்யப்பட்டு பயிர் செய்வதற்கென அறிமுகம் செய்யப்பட்ட முதல் கலப்பிண நெற்பேதம்.

I $H_4$ II $B_g$379-2 III PTB 16 IV BW 351

22. சூரிய இனப்பெருக்கியில் தண்டு துண்டங்களை நாட்டி இலகுவாக வேர் விடச் செய்யலாம் இவ்வாறு நடைபெறக் காரணம்

I வெப்பநிலை, ஈரப்பதன் அதிகளவில் காணப்படல்

II மழைவீழ்ச்சி கிடைக்காதிருத்தல்

III பீடைகள் உட்புக முடியாதிருத்தல்

IV சேரும் நீராவி காரணமாக வளி குளிர்ச்சியடைதல்

23. தூவர ஒட்டுதல் வெற்றியளிப்பதற்கு ஒட்டுக்கட்டை, ஒட்டுமுறை ஆகியவற்றிலுள்ள எந்த இழையங்கள் நன்கு தொடுகையுறவேண்டும்.

I காழ் II உரியம் III மாறிழையம் IV மேற்பட்டை

24. இன்டோல் அசற்றிக்கமிலம், இன்டோல் கியூற்றிக்கமிலம் ஆகிய இரசாயனங்களை விவசாயத்தின்போது பயன்படுத்துவது.

I பூச்சிகளை கட்டுப்படுத்த II தண்டுத் துண்டங்களை வேறூண்டச் செய்ய

III நாற்றுப்படுக்கைகளில் பங்கசுக்களை கட்டுப்படுத்த IV பழவகைகளை பழுக்கச் செய்ய

25. ஒட்டுவதற்கு தெரிவு செய்யும் ஒட்டுக்கட்டையில் இருக்கவேண்டிய மிக முக்கியமான இயல்பு

I விரைவில் காய்த்தல் II வலிமையான வேர்த்தொகுதியை கொண்டிருத்தல்

III சீராக காய்த்தல் IV கூடுதலான விளைச்சல் கிடைத்தல்

26. புயிர்ச்செய்கையின்போது பயிர் ஒன்றின் வாழ்க்கை வட்டத்தின் குறித்த சில சந்தர்ப்பங்களில் மட்டும் ஆளுகை சூழல் நிபந்தனைகள் வழங்கப்படும் அவ்வாறான நிலைமைக்கு உதாரணமாக அரமவது.

I நாற்றுமேடையிலிருந்து பிடுங்கப்பட்ட நாற்றுக்களை வயலில் நடுகை செய்து சில நாட்களுக்கு அவற்றிற்கு நிழல் வழங்கல்

II நடுகை செய்யப்பட்ட மரக்கறி நாற்றுகளுக்கு பூவாளியால் நீர் பாய்ச்சுதல்

III இரசாயன பசளைகளை நாற்றக்களின் அடியைச் சுற்றி இட்டபின்னர் அந்த இடத்திலுள்ள மண்ணை இளக்கமாக்கி விடுதல்

IV நாற்றுகளை சுற்றி சேதனப் பசளைகளை இட்டு மண்ணுடன் கலந்து விடுதல்

27. ஒரே தரையில் ஒரே நேரத்தில் ஒழுங்கற்ற முறையில் இரண்டு அல்லது அதற்கு கூடிய பயிர் வகைகளை செய்கை பண்ணுதல் எவ்வாறு அழைக்கப்படும்

I கலப்புப் பயிர்ச்செய்கை II இடைப்பயிர்ச்செய்கை

III அஞ்சள்பயிர்ச்செய்கை IV வீதி பயிர்ச்செய்கை

28. உரிய முதிர்ச்சி நிலையின்போது விளைச்சலை அறுவடை செய்வதற்கு தாமதமேற்பட்டால் நார்த்தன்மை அதிகரித்து உண்பதற்கு ஏற்றதல்லாத நிலைக்கு உட்படும் பயிர் விளைச்சல்கள் யாவை

I பயறு, கௌப்பி II வெண்டி, பீர்க்கு III மாம்பழம்,தக்காளி IV பப்பாசி, வாழை

29. அறுவடைக்கு பிந்திய தொழிநுட்பத்தின் பிரதான குறிக்கோள்

I அறுவடைக்கென இயந்திரங்களை பயன்படுத்தல்

II அறுவடைக்கு பிந்திய காரணிகளை முகாமை செய்து விளைச்சல் இழப்பை குறைத்தல்

III விளைச்சலை கொண்டு செல்வதற்கென பிளாஸ்ரிக் பெட்டிகளை பயன்படுத்தல்

IV விளைச்சலை களஞ்சியப்படுத்துவதற்கு குளிர் சேமிப்பு அறைகளை பய்ன்படுத்தல்

30. நபர் ஒருவரின் உடற் திணிவுச் சுட்டியை ( BMI ) கணிப்பதற்கு தேவையான அளவீடுகளாவன.

I உடல் நிறையும், உயரமும் II உயரமும், இடுப்புச் சுற்றளவும்

III பிறப்பு நிறையும், வயதும் IV குருதியிலுள்ள வெல்லத்தின் அளவும், உயரமும்

31. உணவு பழுதடைதலில் செல்வாக்குச் செலுத்தும் இரசாயன காரணி எது

I உணவிலுள்ள ஈரலிப்பு II சூழல் வெப்பநிலை

III உணவில் நடைபெறும் நொதிய தொழிற்பாடு IV உணவின் மீதான பங்கசு வளர்ச்சி

32. சில நபர்களுக்கு, சில உணவுகளை உண்பதனால் ஒவ்வாமை நிலைமை ஏற்படும் அவ்வாறான உணவு வகைகளாவன

I உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு II பட்டர், பாண்

III இறால், தக்காளி IV பாண், சோளம்

33. ஜேம் தயாரிப்பின்போது உபயோகிக்கும் முக்கியமான உணவு நற்காப்பு முறை

I செறிவாக்கல் II இழிவளவான பதப்படுத்தல்

III வெப்பநிலை கட்டுப்பாடு IV நொதித்தல்

34. காய்ந்த மரக்கறிகளை பெறுவதற்காக மரக்கறிகளை சிறு துண்டுகளாக வெட்டியவுடன் பிளான்சிங் செய்யப்படும். இதற்கு காரணம்

I நுண்ணங்கிகளை அழித்தல் II காய்வதனை இலகுப்படுத்த

III நற்காப்பு பொருட்களை சேர்த்தல் IV நொதியங்களை செயலிழக்கச் செய்தல்

35. ‘’ குவாசியோகோர்’ நோய் எப்போசணைக் குறைபாட்டினால் ஏற்படுகின்றது.

I புரதம் II காபோவைதரேற்று III இலிப்பிட்டு IV விற்றமின்

36. நற்காப்பிட்ட உணவும் நற்காப்பு முறையும் சரியாக குறிப்பிடப்படுள்ள நிரை எது

| நற்காபிட்ட உணவு | நற்காப்பு முறை |
|---|---|
| I கருவாடு | செறிவூட்டல் |
| II எலுமிச்சை ஊறுகாய் | நொதிக்கவிடல் |
| III பழ ஜாம் | பாய்ச்சராக்கம் |
| IV பால்மா | சிவிறி உலர்த்தல் |

37. மிக விரைவில் பழுதடையக்கூடிய உணவு மட்டும் கொண்ட தொகுதி யாது?

I மீன்,பால்,இறைச்சி          II முட்டை,இறைச்சி,முந்திரிகை வற்றல்

III மீன்,பால்,பப்பாசி          IV சோறு, கேக்,பழச்சலாது

38. வினைத்திறனான நீர்பாசன முறையாக அமைவது

I துளிப் பாசனம்     II பாத்திப் பாசனம்  III வரம்புசால்பாசனம்     IV தூவல் பாசனம்

39. இலங்கையில் மொத்த தேசிய உற்பத்தில் அதிக பங்களிப்பு செய்யும் துறை யாது?

I விவசாய துறை     II சேவை துறை          III கைத்தொழில் துறை   IV கால்நடை

40. மண்ணின் காரத்தன்மை நீக்க பயன்படும் பொருளாக அமைவது

I கந்தகம்          II டொலமைற்று          III சுண்ணாம்புத்தூள்  IV கல்சியம் காபனேற்று

**பகுதி –II**

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்கு விடை எழுதுக.**

1. I. குடும்பத்தின் வேளை உணவில் புரதத்தை வழங்குவதற்கென வீட்டுத்தோட்டத்தில் செய்கை பண்ணக்கூடிய பயிர்கள் இரண்டை பெயரிடுக?

II சிறிய வீட்டுத் தோட்டமொன்றில் இடைப் பண்படுத்தலை மேற்கொள்வதற்கென பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் இரண்டை பெயரிடுக?

III வீட்டுத்தோட்டத்தில் பூச்சிப் பீடைகளை கட்டுப்படுத்துவதற்கு வீட்டிலேயே தயாரிக்கக் கூடிய இரசாயனம் அல்லாத பீடை நாசினிகள் இரண்டை பெயரிடுக?

IV  A. பாத்தி நாற்றுமேடையுடன் ஒப்பிடுகையில் நெரிடோக்கோ நாற்றுமேடை முறையிலுள்ள அனுகூலம் யாது?

B நெரிடோக்கோ நாற்றுமேடை ஊடக கலவையை தயாரிக்க தேவையான பதார்த்தங்கள் மற்றும் அவற்றின் விகிதங்கள் ஆகியவற்றை எழுதுக

V பயிர்களில் ஏற்படும் நைதரசன் குறைபாட்டை நீக்குவதற்கென மண்ணுக்கு இடத்தக்க இரசாயன பசளை வகைகள் இரண்டை பெயரிடுக?

VI மண்ணின் நீர்வடிப்பு குறைவடைவதனால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படத்தக்க பாதிப்பான நிலைமைகள் இரண்டை பெயரிடுக?

VII  A. மண் கட்டமைப்பு என்றால் என்ன

B இலங்கையில் காணப்படும் பிரதா மண் கட்டமைப்பு வகைகள் மூன்று தருக?

VIII பாரம்பரிய நெற்பேதங்களுடன் ஒப்பிடுகையில் திருத்திய நெற்பேதங்கள் கொண்டுள்ள இயல்புகள் இரண்டை பெயரிடுக?

IX நெற்செய்கையில் களைகள் உருவாவதை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய இரசாயனம் அல்லாத நடவடிக்கைகள் இரண்டை பெயரிடுக?

X புரத கலோரி குறைபாட்டினால் ஏற்படும் நோய்கள் இரண்டை பெயரிடுக?

2. காலநிலை, மண் ஆகிய சூழற் காரணிகள் இரண்டும் பிரதானமாக பயிர்களில் செல்வாக்கு செலுத்துகின்றது. இந்த இரண்டுகாரணிகளையும் சரியாக முகாமை செய்வதன் மூலம் வெற்றிகரமாக பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும்.

I.  A. பயிர்ச்செய்கையின்போது மண்ணுக்கு சேதன பசளைகளை இடுவதன் அனுகூலங்கள் இரண்டு தருக?

B பயிர்ச்செய்கையின்போது மண்ணுக்கு இடப்படும் இரசாயன பசளைகளை வினைத்திறனை அதிகரிக்கத்தக்க இரண்டு முறைகளை குறிப்பிடுக?

II வானிலை , காலநிலை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக?

III அட்டவணையை நிரப்புக?

| காலநிலை வலயம் | பிரதானமாக கிடைக்கும் பருவப் பெயர்ச்சி மழை | அந்த மழை கிடைக்கும் காலப்பகுதி ( மாதம் ) |
|---|---|---|
| ஈர வலயம் | A. ………………… | B. …………………… |
| உலர் வலயம் | C. ………………… | D. …………………… |

3. I இயற்கை பதிய கட்டமைப்புக்கள் இரண்டை பெயரிட்டு அவை ஒவ்வொன்றிற்கும் உதாரணம் ஒவ்வொன்றை குறிப்பிடுக.

II காற்றுப் பதிவைத்தல் செயன்முறையை பெயரிடப்பட்ட வரிப்படங்களின் உதவியுடன் விளக்குக

III A இழைய வளர்ப்பு மூலம் தாவரங்களை இனம் பெருக்குவதன் அனுகூலங்கள் இரண்டு தருக?

B தண்டு துண்டங்களை நாட்டும்போது வேர்விடலை தூண்டுவதற்கென பயன்படுத்தப்படும் ஓமோன் வகைகள் இரண்டு தருக?

4. I A. உணவு பழுதடைவதற்கு காரணமான பௌதீக காரணிகள் நான்கு தருக?

B. உணவு நற்காப்பின் முக்கியத்துவங்கள் இரண்டு தருக?

II. A. உணவுக்கு பெறுமதி சேர்த்தல் என்றால் என்ன?

B. உணவுக்கு பெறுமதி சேர்க்கும் முறைகள் இரண்டை குறிப்பிட்டு உதாரணம் ஒன்று தருக?

III உணவு நற்காப்பு முறைகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக?

5. I. A. மண்ணரிப்புச் செயன்முறையின் படிமுறைகள் மூன்றை பெயரிடுக?

B. மண்ணரிப்பு காரணமாக பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதகமான விளைவுகள் இரண்டு தருக?

II சாய்வான பயிர்ச்செய் நிலத்தின் மேற்பரப்பில் நீர் ஓடி வழியும் வேகத்தை குறைக்க மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் நான்கு தருக?

III மண் இறுக்கமடைவதனால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டு தருக?

6. I A. பயிர்ச்செய்கையில் நிலம் பண்படுத்தலின் நோக்கங்கள் நான்கு தருக?

B. பயிர்ச்செய்கையின்போது தயாரிக்கப்படும் பாத்தி வகைகள் நான்கு தருக?

II அட்டவணையிலுள்ள யுஈடீஊனுஈநுஈகு ஆகிய இடைவெளிகளுக்குரிய தகவல்களை மட்டும் சரியான எழுத்துக்களுடன் உங்கள் விடைத்தாளில் எழுதுக?

| உபகரணம் | உபகரணம் பயன்படுத்தப்படும் நிலம் பண்படுத்தல் படிமுறை | உபகரணத்தை செயற்படுத்த பயன்படுத்தப்படும் வலு |
|---|---|---|
| இறகு கலப்பை | முதற் பண்படுத்தல் | இயந்திர வலு |
| வட்ட தட்டு கலப்பை | A | D |
| சாலிடு கருவி | B | E |
| ஜப்பானிய சுழல்களை கட்டி | C | F |

III பயிர் நடுகையின்போது பயிர்களுக்கு இடையில் சிபாரிசு செய்யப்பட்ட இடைவெளியை பேணுவதன் அனுகூலங்கள் மூன்று தருக?

7. I பயிர்ச்செய்கையில் களைகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் நான்கு இரசாயனம் அல்லாத முறைகளை குறிப்பிடுக

II பயர்ச் செய்கையில் பூச்சி பீடை சேதங்களை கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய நான்கு முறைகளை தருக?

III பின்வரும் தாவர நோய்களுக்கான நோய்க்காரணி அங்கிகளை குறிப்பிடுக?

A. நாற்று மேடை தாவரங்களில் நாற்றழுகல்

B. வெள்ளரியில் இலை சித்திர வடிவ நோய்

C. பசளியில் வேர் முடிச்சுகள் நோய்

D. கரட்டில் மென்னழுகல்